இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 89 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 22 – ஞாயிற்றுக்கிழமை 08 நவம்பர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 89 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 22- Sunday 08 November 2026 - Dak 8 Pages ₹ 5.00

சினிமா திரையரங்குகளுக்கு அனுமதி அளிக்கும் த.வெ.க. அரசு

மாநில உரிமைகளுக்கு மட்டும் தடை விதிப்பது ஏன்?

நீதியரசர் குரியன் ஜோசப் குழு கலைப்பு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, நவ. 8 –

“த.வெ.க. ஆட்சியில் மாநில உரிமைகளுக்குத் தடை, சினிமா திரையரங்குகளுக்கு அனுமதி” என்று நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழு கலைக்கப் பட்டது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய மாநில உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட குரியன் ஜோசப் குழுவை திடீரென கலைத்து த.வெ.க. அரசு அரசாணை வெளியிட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மாநிலங்களின் உரிமை களைப் பாதுகாக்கவும், இந்தியக் கூட்டாட்சிக் கட்டமைப்பை வலுப் படுத்தவும் இந்தக் குழு அமைக்கப் பட்டது. இந்தக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி குரியன் ஜோசப் நியமிக்கப்பட்டார். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் வர்தன் ஷெட்டி, மாநிலத் திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன் ஆகியோர் உறுப் பினர்களாக நியமிக்கப்பட்டனர்.



மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், இந்தியக் கூட்டாட்சிக் கட்டமைப்பை மறுசீரமைக்கவும் மற்றும் மாநிலத்தின் சட்ட மற்றும் நிர்வாக அமைப்புகளை மேம்படுத்து தல் போன்ற பணிகள் இப்போது தமிழ்நாடு மாநில சட்ட ஆணை யத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

“திரைப்படங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை, மாநில உரிமைகளுக்கு அளிக்க த.வெ.க. அரசு மறுப்பதாக கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

த.வெ.க. ஆட்சியில் சினிமா திரையரங்குகளுக்கு பச்சைக் கொடி, மாநில உரிமைகளுக்கு தடையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

விவரம் தெரியாமல் டம்மி முதல்வர் அறிக்கை! அடடே இந்த பொம்மை பேசுமா?

பெரியார் அறிவுலகத்துக்கு ‘போலி புத்தகங்கள்’ வாங்கப்பட்டது எப்போது?

முதலமைச்சர் விஜய்க்கு தி.மு.க. சமூக வலைத்தளப் பதிவில் பதிலடி!

சென்னை, நவ.8 –

‘பெரியார் அறிவுலகத்தில் அகல் விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப் பகத்தின் போலியான நூல்களில் மட்டும் ஜூன் மாதம் என்று முத்திரை இடப்பட்டுள்ளது.

அப்படியென்றால் போலி பதிப்பக புத்தகங்கள் எப்போது வாங்கப் பட்டன? யார் முடிவு எடுத்தது? த.வெ.க. ஆட்சியில் யாருக்கு கமிஷன் போனது?’ என்று தி.மு.க. கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து தி.மு.க. தமது அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் வெளி யிட்ட பதிவில், “இடைத்தேர்தல் பிரச்சாரம் மற்றும் தேர்தல் முடிவுக்கு (அக்.9) பிறகு த.வெ.க. தலைவர், டம்மி முதல்வர் அதிகாரப்பூர்வ பக்கத்தில் இருந்து வந்திருக்கும் பதிவு ‘அடடே இந்த பொம்மை பேசுமா?’ என ஆச்சரிய மளிக்கிறது.

விலைவாசி உயர்வு குறித்து மௌனம் காக்கும் முதல்வர்!

விலைவாசி உயர்வு குறித்து பதிவு இல்லை. கொலைகள் குறித்து கவலை யில்லை. காணாமல் போன சிறுமி குறித்து விசாரிப்புகள் இல்லை. மின் வெட்டு, மின் கட்டணம் குறித்தெல்லாம் எந்த வாக்குறுதியும் இல்லை. அவ்வளவு ஏன் அரசின் அசமஞ்சத்தால் கடலில் இறந்து மிதந்த மீனவர்கள் குறித்து கூட பதிவு இல்லை.



ஆனால், தி.மு.க. தலைவர் கோவை பெரியார் அறிவுலகம் சென்றதும், அவருக்கு கிடைத்த பாராட்டும் பேசு பொருளானதும், புத்தக கொள் முதலில் ஊழல் என்று ஓடி வந்திருக்கிறார் த.வெ.க. தலைவர்.

போலி பதிப்பகங்களில் புத்தகம் வாங்கல்!

பெரியார் அறிவுலகத்தில் அகல் விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப்பகத்தின் போலியான நூல்களில் மட்டும் ஜூன் மாதம் என்று முத்திரை இடப்பட்டுள்ளது என்று அங்கிருப்பவர்கள் தெரிவிக் கிறார்கள். அந்த தேதி கூட டம்மி முதல்வருக்கு பிறந்தநாள் தான்.

அதே பெரியார் அறிவுலகத்தில் உள்ள ‘வால்காவில் இருந்து கங்கை வரை’ போன்ற புகழ்பெற்ற மற்ற பதிப்பக நூல்கள் தி.மு.க. ஆட்சியின் மார்ச் மாத முத்திரை யோடு உள்ளன. அப்படியென்றால் போலி பதிப்பக புத்தகங்கள் எப்பொழுது வாங்கப் பட்டன? யார் முடிவு எடுத்தது? த.வெ.க. ஆட்சியில் யாருக்கு கமிஷன் போனது?

திரிஷா விஜய் - விஜய் பாலு - பெயரில் புத்தகங்கள்!

கடந்த ஆட்சியில் நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதில் எந்த விதமான ஒளிவு மறைவுமின்றி வெளிப் படையான முறையில் புத்தகங்களை கொள்முதல் செய்யப் பட்டது என்பதை பதிப்பாளர்களே அறிவர்.

தி.மு.க. ஆட்சியில் புத்தகத் தேர்வுக் குழுவில் இருந்த எழுத்தாளர் ஒருவர், த.வெ.க. ஆட்சியமைந்த ஆறு மாதங் களுக்குப் பிறகு நூலகத்தில் உள்ள புத்தகங்களின் பெயர்களையும் திரிஷா விஜய், விஜய் பாலு, விஜய் செல்வம், விஜய் ஆதித்தன், சுமேகா விஜய் என்ற ‘எழுத்தாளர்களின்’ பெயர்களையும் பார்த்து பதறிய பிறகுதான் அரசுக்குத் தெரிந்ததா? அல்லது எந்த விவரமும் தெரியாமல் தான் டம்மி சி.எம். அறிக்கை விட்டு இருக்கிறாரா?’ என அந்தப் பதிவில் தி.மு.க. விமர்சித்துள்ளது.

முன்னதாக, “கோவை பெரியார் அறிவுலகம் உள்ளிட்ட புதிய நூலகங் களுக்கான நூல் பரிந்துரைக் குழு கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டது. அக்குழுவில் இடம்பெற்றிருந்த பெருமாள் முருகனே, பெரியார் அறிவுலகத்துக்கு நூல் கொள்முதல் செய்யப்பட்டதில் ஊழல் நடந்துள்ளதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார்” என்று முதல்வர் விஜய் தெரிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.